இறைவனின் திருப்பெயரால் ஆரம்பம் செய்கிறோம்...

“...எவர் ஒரு ஆத்மாவை வாழ வைக்கின்றாரோ அவர் மனிதர்கள் அனைவரையும் வாழ வைத்தவர் போலாவார்... [அல்குர்ஆன் 5:32]”





# மேலப்பாளையம் மெடிக்கல் சொஸைட்டி

# MELAPALAYAM MEDICAL SOCIETY

Regd. No. 54/2017

www.mmsorg.com

> “உங்களுக்குப் பிரியமான பொருளிலிருந்து நீங்கள் (தானமாக) செலவு செய்யாத வரையில் நிச்சயமாக நீங்கள் நன்மையடைய மாட்டீர்கள். ஒரு சொற்பத்தை நீங்கள் தானம் செய்த போதிலும் நிச்சயமாக அல்லாஹ் அதனையும் நன்கறிவான். (அல்குர்ஆன். 3:92)”







## அன்பான சகோதர, சகோதரிகள் மீது ஏக இறைவனின் சாந்தியும் சமாதானமும் உண்டாகட்டுமாக...!

மேலப்பாளையம் மக்களின் சமூக சூழல் மற்றும் பொருளாதார நிலை மாறி வரும் இக்காலகட்டத்தில் நாளுக்கு நாள் நோய்களும் அதிகரித்து வருகிறது. இந்நிலையில் நோய்களுக்கான மருத்துவ சிகிச்சை பெறுவது ஏழை, எளிய மக்களுக்கு ஓர் எட்டாக்கனியாக இருந்து வருகின்றது. இதன் விளைவாக மக்கள் நோயுடனேயே வாழும் அவல நிலை அல்லது அதனை தவிர்க்க சாத்தியக்கூறுகள் இல்லாததால் (அகால) மரணம் ஏற்படுகிறது. எதிர்பாராத மருத்துவ செலவு இன்றைய சூழலில் எல்லோராலும் எதிர் கொள்ளக்கூடிய ஒன்றாக இருந்து வருகிறது. குறிப்பாக ஏழைகளை அது சொல்லமுடியாத துயரத்திலும், கஷ்டத்திலும் ஆழ்த்துகிறது. சுமார் 2 இலட்சத்திற்கும் அதிகமான மக்கள் வசிக்கும் நமதூரில் பொருளாதார வசதி பெற்ற அனைவருக்கும் இது போன்ற தேவையுள்ள ஏழைகளுக்கு உதவ வேண்டிய தார்மீக பொறுப்புள்ளது.

இந்த பொறுப்பை நன்குணர்ந்த பல நல்லுள்ளங்கள், பல்வேறு நற்பணிக்குழுக்கள் மற்றும் பைத்துல்மால்கள் ஒருங்கிணைந்து ஏழை, எளிய மக்களின் மருத்துவ தேவையை பூர்த்தி செய்ய உருவாக்கப்பட்டதே மேலப்பாளையம் மெடிக்கல் சொஸைட்டி.

> “...நாம் உங்களுக்கு அளித்த பொருளிலிருந்து, தான தர்மம் செய்து கொள்ளுங்கள்... (அல்குர்ஆன் 63:10)”

## MMS ஓர் அறிமுகம்

- ஏழை எளிய மக்களின் மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைக்கான பொருளாதார உதவிகளை செய்வதற்காக 2015 ஆம் ஆண்டு நமதூரில் செயல்பட்டு வரக்கூடிய நற்பணிக்குழுக்கள் மற்றும் பைத்துல்மால்கள் இணைந்து மேலப்பாளையம் பைத்துல்மால் யுனிட்டி **(MPMBU)** என்னும் வாட்ஸ் அப் குழுமம் உருவாக்கப்பட்டது.
- **MPMBU**-ன் வெளிப்பாடாக நமதூரில் மக்களுக்கு நிரந்தர தீர்வாக மேலப்பாளையத்தில் ஓர் உயிர்காக்கும் மருத்துவமனையை உருவாக்கும் நோக்கத்தோடு 2017 ஆம் ஆண்டு முறையாக பதிவு செய்யப்பட்ட அமைப்பு மேலப்பாளையம் மெடிக்கல் சொஸைட்டி **(MMS).**
- சேவை அடிப்படையிலான ஒரு மருத்துவமனையை உருவாக்க வேண்டுமென்றால் ஒட்டு மொத்த ஊர் மற்றும் சமூகத்தினுடைய பங்களிப்பும், ஒத்துழைப்பும் அவசியம். இதை நன்கு உணர்ந்து நமதூரில் முஹல்லாவாரியாக செயல்பட்டு வரும் நற்பணிக்குழுக்கள் மற்றும் பைத்துல்மால்களை **MMS** உடன் இணைத்து சேவையாற்றி வருகிறோம். இந்த உயரிய சேவையில் புதிதாக உருவாக்கப்படுகின்ற பைத்துல்மால்களையும் இணைக்க முயற்சி செய்து வருகின்றோம்.

## MMS -ன் நோக்கங்கள்

1. உயிர்காக்கும் மருத்துவத்திற்கு முன்னுரிமை அளிக்கும் வகையில் ஒரு மருத்துவமனை அல்லது பாலிகிளினிக்கை உருவாக்குவது.
2. ஏழை எளிய மக்களுக்கு பயனளிக்கும் வகையில் மருத்துவ சேவை மற்றும் பொருளாதார உதவி செய்வது.
3. வளர்ந்து வரும் பல்வேறு நோய்களைக் கட்டுப்படுத்தக் கூடிய அனைத்து மருத்துவ முறைகளையும் ஒருங்கிணைத்து சிகிச்சை அளிப்பது.
4. ஏழை எளிய மக்களுக்காக உருவாக்கப்பட்டுள்ள மருத்துவ சேவைகளை கண்டறிந்து, தேவையுடையவருக்கு வழிகாட்டுவது.
5. அரசு மருத்துவமனை, அரசின் மருத்துவ சேவைகளைப் பயன்படுத்த மக்களை ஆர்வமூட்டுதல் மற்றும் அரசுப் பணியாளர்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது.
6. மக்களிடையே மருத்துவம் மற்றும் சுகாதாரம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது.
7. நோய்கள் வருமுன் தடுக்க நமது சுற்றுப்புறத்தை சுத்தமாக வைத்திருக்க முயற்சிகள் எடுப்பது.
8. மருத்துவ சேவை செய்யக்கூடிய அனைத்துத் தன்னார்வ தொண்டு அமைப்புகளை ஒருங்கிணைத்து ஏழை எளிய மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வது.

# மருத்துவமனையை நிர்மாணிக்க செயல்திட்டம்

உயிர்காக்கும் மருத்துவ சேவையை உள்ளடக்கிய மருத்துவமனையை உருவாக்கும் மிகப்பெரிய இத்திட்டத்தினை பல்வேறு கட்டங்களாகப் பிரித்து நடைமுறைபடுத்த இன்ஷா அல்லாஹ் திட்டமிடப்பட்டுள்ளது.

## கட்டம் 1 (Phase - 1)

இத்திட்டத்தின் முதற்கட்டமாக நமது ஊரிலோ அல்லது ஊருக்கு அருகிலோ, எளிதில் அடையும் தூரத்தில் 30 சென்ட் முதல் 1 ஏக்கர் வரை உள்ள ஒரு நிலத்தை வாங்கி முறையாக **MMS** அமைப்பின் பெயரில் பதிவு செய்தல்.

## கட்டம் 2 (Phase - 2)

உள் நோயாளிகளுக்கான 5 படுக்கைகள் மற்றும் அறுவை சிகிச்சை செய்ய தேவையான அடிப்படை வசதிகள் அடங்கிய ஒரு மருத்துவமனைக்கான கட்டிடம் கட்டுதல்.




GROUND FLOOR PLAN

# மருத்துவமனையின் நிர்வாகம்

**MMS**-ன் செயற்குழு மற்றும் பொதுக்குழுவால், இன்ஷா அல்லாஹ் மருத்துவமனை நிர்வாகம் செய்யப்படும்.

# மருத்துவமனையை நிர்வகிக்க செயல் திட்டம்

மருத்துவமனையில் செய்யப்படும் அறுவை சிகிச்சைகளுக்கு நோயாளிகளின் பொருளாதார வசதிக்கேற்ப, முழுக் கட்டணமாகவோ **(Fully Affordable)**, பகுதிக் கட்டணமாகவோ **(Partially Affordable)** அல்லது இலவசமாகவோ **(Unaffordable)** மருத்துவ சிகிச்சை அளிக்கப்படும். குறைவான கட்டணம் வசூலிக்கப்பட்டாலும் தரமான சிகிச்சை மற்றும் மருத்துவ சேவை உறுதி செய்யப்படும் இன்ஷா அல்லாஹ்.

## கௌரவ மருத்துவ ஆலோசகர்கள்

- Dr. E.M. நிஜாமுத்தீன் M.B.B.S., D.C.H.,
- Dr. S. நாசர் M.B.B.S., MD., (General Medicine)
- Dr. M. அபுல் காசிம் M.B.B.S., D.Ortho; DNB (Ortho)
- Dr. A. செய்யது இப்ராஹிம் M.B.B.S., D.C.H., MRCP (UK)
- Dr. S. ஜுபைர் கான் M.B.B.S., DTCH.
- Dr. O.M. ரஹ்மான் சாகுல் ஹமீது M.B.B.S., D.T.C.D.
- Dr. P.K. செந்தில் குமார் MD., DM., (Nephrology)
- Dr. P.K. யூசுப் M.B.B.S., PGDHS (Diab.)

## மருத்துவ ஆலோசனைக்குழு

- Dr. M.B. அப்துர் ரஹ்மான் M.B.B.S., MD., (PSYCH)
- Dr. K. ஆதில் அஹமது யாமீன் M.S., (Gen. Surg.), M.Ch. (Plastic Surgery)
- Dr. M. ஆபிதா பர்வீன் M.B.B.S., DNB (OBG), PGDMCH
- Dr. J.A.M. செய்யது இப்ராஹிம் ஷா M.B.B.S., MD., (Pediatric)
- Dr. M. முகம்மது ஃபைசல் பசீர் M.B.B.S., MD., (Internal Medicine)
- Dr. T. சிராஜ் ஃபாத்திமா M.B.B.S., D.G.O. FELLOW IN LAPROSCOPIC SURGERY (ICOG)
- Dr. M.Y. முகம்மது யாசர் M.B.B.S., M.S., (Gen Surgery)
- Dr. S.A. நூருல் ஹசன் MD., (PSYCH) NIMHANS

## கௌரவ ஆலோசகர்கள்

- ஹாஜி. Er. S.K. செய்யது அஹமது M.Tech., MBA.,
- ஹாஜி. J.H.A. முகம்மது ஹபீப்
- ஹாஜி. A.M. செய்யது அலி M.A.,
- ஹாஜி. முனைவர். செய்யது வாப்பா M. கலந்தர் ( Director, ETA Group of Institution - UAE)
- ஹாஜி. T.S.M.O. செய்யது முகம்மது புஹாரி M.Com.,

## MMS - ஐ நிர்வகிக்கும் அணிகள்

- அல் அமானத் வெல்ஃபேர் அசோசியேஷன் (AAWA)
- அல் கவ்ஸர் இளைஞர் பேரவை (AKIP)
- அல்முக்ஸித் சோசியல் வெல்ஃபேர் டிரஸ்ட் (AMSWT)
- அல் வலிய் சோசியல் வெல்ஃபேர் அசோசியேசன் (ASWA)
- அசோசியேசன் ஆப் அன்சார் (AOA)
- அழகிய கடன் அல்லாஹ்வுக்காக பைத்துல்மால் (AKA)
- ஆலப்பிள்ளைத்தெரு ஆக்கப்பணி அமைப்பு (ASAP)
- ஆசுரா டிரஸ்ட் (AT)
- ரஹ்மானியாபுரம் முஸ்லிம் வெல்ஃபேர் டிரஸ்ட் (RMWT)
- தெற்குமுகைதீன் தெரு நல அமைப்பு (SMS)
- இம்ப்ராஸ் பைத்துல்மால் (IBM)
- குட்டி மூப்பன் தெரு பைத்துல்மால் (KMS)
- மேலப்பாளையம் பிரதர்ஸ் பைத்துல்மால் (MBB)
- மேலப்பாளையம் ஹெல்த்கேர் சொஸைட்டி (MHS)
- முஹம்மது பைத்துல்மால் (MBM)
- நுஸ்ரத்துல் முஃமினின் வெல்ஃபேர் (NMW)
- காயிதே மில்லத் தெரு பைத்துல்மால் (QMS)
- சதகா நண்பர்கள் (SN)
- ஸதீக் ஸதகா டிரஸ்ட் (SST)
- ஸ்பீடு இரத்ததான சேவைக்கழகம் (SBS)
- உஹரவி வெல்ஃபேர் அசோசியேஷன் (VWA)
- வீராத்தெரு பைத்துல்மால் (VBM)
- ராவுத்தர் தெரு பைத்துல்மால் (RBM)

## மருத்துவ உதவிக்காக MPMBU - ல் அங்கம் வகிக்கும் அணிகள்

- அல்இக்லாஸ் பைத்துல்மால் (Al Ikhlas BM)
- அந்-நூர் டிரஸ்ட் (ANT)
- சீனி வீட்டுத்தெரு (SVS)
- SSS பைத்துல்மால் (SSS)
- மேலப்பாளையம் முன்னேற்றக் கூட்டமைப்பு (MPMPROF)
- சப்பாணி ஆலிம் லெப்பை தெரு (SLB)

# MMS-ன் களப்பணிகள் மற்றும் மருத்துவ சேவைகள்

1. கடந்த இரண்டு ஆண்டுகளில் ஏறக்குறைய 150க்கும் மேற்பட்ட பயனாளிகளுக்கு மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைக்கான பொருளாதார உதவி செய்யப்பட்டுள்ளது.

2. மாதந்தோறும் சுமார் 80 முதல் 100 பயனாளிகளுக்கு (MMS-ல் அங்கம் வகிக்கும் பைத்துல்மால்கள் மூலம்) மருந்து மாத்திரைகளுக்கான உதவியும், சுமார் 4 முதல் 6 பயனாளிகளுக்கு அறுவை சிகிச்சைக்கான பொருளாதார உதவியும் செய்யப்பட்டு வருகிறது.



18.12.2016 அன்று 10,000-க்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு காசநோய் கண்டறியும் முகாம்



24.03.2017 அன்று முதலமைச்சர் மருத்துவ காப்பீட்டுத் திட்டம் பற்றிய விழிப்புணர்வு



15.08.2017 அன்று ஏறத்தாழ 12,000 பேருக்கு நிலவேம்பு கசாயம் விநியோகம்



23.12.2017 அன்று இரு சக்கர வாகன சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி




19.08.2018 அன்று புற்றுநோய் விழிப்புணர்வு நிகழ்ச்சி



06.11.2018 அன்று வரும் முன் காக்க, நிலவேம்பு கசாயம் விநியோகம்

# MMS - கடந்து வந்த பாதை & செயல்திட்டம்




## உங்களுடைய பங்களிப்பு

"நிச்சயமாக தானதர்மம் செய்யும் ஆண்களும், பெண்களும்; இன்னும் அல்லாஹ்வுக்கு அழகான கடனாகக் கடன் கொடுத்தார்களே அவர்களும் – அவர்களுக்கு (அதன் பலன்) இரு மடங்காக்கப்படும்–(அன்றியும்) அவர்களுக்கு (அல்லாஹ்விடம்) கண்ணியமான நற்கூலியும் இருக்கிறது. (அல்குர்ஆன். 57:18)"

மேலப்பாளையம் வாழ் ஏழை எளிய மக்களின் துயர் துடைக்க உயர் நோக்கத்தோடு உறுதி பூண்டுள்ள இந்தப் பணியில் உங்களுடைய பங்களிப்பையும் தந்து ஏக இறைவனின் அருளைப் பெறுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

## வங்கி கணக்கு

Melapalayam Medical Society
A/C No : 561701010030300

IFSC Code : UBIN0556173
Bank : Union Bank of India

Account type : Current Account
Branch : Melapalayam

**MELAPALAYAM MEDICAL SOCIETY**
No. 38, Nilofar Complex, 1st Floor, Kottikulam Road, Melapalayam, Tirunelveli-5.
Contact : 95854 65676, 7200 370065, 98435 99534 | E-mail : mpmmedicalsociety@gmail.com